காஞ்சி

நிறுவனர்

அறிஞர் அண்ணா

27-10-68

விலை 20 காசு



இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

இதுவும் ஒரு செய்திதான்!

இந்தியத் துணைக்கண்டத்தில் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் நடைபெற்று வந்துள்ளன. அவ்வப்போது நடைபெற்றுக்கொண்டும் வருகின்றன. ஆசிரியர் இல்லாத பள்ளி, மருந்தில்லாத மருத்துவ மனை என்பவைகள் எல்லாமே அதிசயங்கள் அல்லவா! சில ஆண்டுகளுக்கு முன் இந்திய அரசின் சில அலுவலகங்கள், செயல்படாத இடத்துக்கு வாடகைச் செலுத்தி வந்ததாகக்கேட்டு வியந்துபோனவர்களுக்கு இபபோது ஒரு புதிய செய்தி வந்திருக்கிறது. கல்கத்தா நகரம், உலகின் எண்டிசையிலும் புகழ்ப் பெற்ற பகுதி! அங்கு ஒரு மாநகராட்சியும் இருக்கிறது. ஆட்சித் தலைவர், ஆணையர் எல்லாருமே இருக்கிறார்கள். தலைமை எழுத்தர் கூட உண்டாம்! ஆனால் எத்தனைப் பேர் அந்த பணி மனையில் பணியாற்றுகின்றனர் என்பதற்கு விவரம் மட்டும் இல்லையாம்! சென்குப்தா என்ற ஒரு புதிய ஆணையர் பதவியேற்று, அந்தந்த துறை அதிகாரிகளை அழைத்து இதுபற்றிய விவரத்தைக் கேட்டாராம்! பதிலில்லையாம்! ஒரு வார கால அவகாசம் கொடுத்து விட்டு, மீண்டும் கேட்டாராம்! அப்போதும் பதிலில்லையாம்! அந்த நகராட்சியில் பெரும்பாலோர், நேரில் தம் ஊதியத்தைப் பெறும் பழக்கமில்லையாம்! யாரையாவது அனுப்பித்தான் பெற்றுக் கொள்வார்களாம்! இதனால் பணி செய்யாத பலரும்கூட ஊதியம் பெற்று வந்திருக்கிறார்களாம் இதுவரையில்! இது ஒரு செய்திதான் என்று நம்புகிறீர்களா இல்லையா!

இதுதான் ஜனநாயகம்!

60000 மனைவியர்களோடு அந்தப்புரத்தில் ஆனந்தமாக இருந்தார் தசரதர் என்று இராம காதையில் படிக்கும்போது, அடேயப்பா ஒருவருக்கு இத்தனை மனைவிகளா? என்று வியக்காதவர்கள் இருக்கலாம். ஏனென்றால் அது கதைதானே என்ற எண்ணத்தால்! ஹைதராபாத் நிஜாம், தம் பதவியைப் பறி கொடுத்த போது நூற்றுக் கணக்கான மனைவியருக்கு உதவித் தொகைக் கொடுத்து விலக்கினார் என்று செய்தி வந்த போது ஒருவருக்கு இத்தனை மனைவிகள் இருக்க முடியுமா என்று வியந்தே போனவர்களும் உண்டு! எதிர் பார்த்த ஊதியம், தாம் பணியாற்றும் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெறாதபோது தொழிலாளர்கள் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் முதலானவைகள் நடத்துவதை உணர்ந்துகொள்ள முடியும். அரசியல் கட்சிகள் இதுபோன்று ஏற்பாடுகளைச் செய்யும் போது கட்சி வளர்ச்சியும் காரணமாக இருக்கலாம்—கண்டனக் கருத்தும் ஒட்டி நிற்கலாம்! இவையெல்லாம் செய்திகளாக வைத்துப்பார்க்கிறபோது வியப்பேதும் ஏற்படுவதில்லை! ஆனால் ஒரு நாட்டின் மன்னர், தமக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்டு ஊர்வலம் நடத்தினார் என்றால் அது சுவையான செய்திதானே! அதோடு தமது 112 மனைவியர்களையும் உடன் அழைத்துக்கொண்டு ஊர்வலமாக வந்து கோரிக்கை மனுவையும் தந்தார் என்றால் இன்னும் இன்னும் இன்னும் வியப்புக்குரியதுதானே! அரபுக் கதைகளை நினைவூட்டும் இந்த நிகழ்ச்சி ஆப்பிரிக்காவில் அண்மையில் நடைபெற்றிருக்கிறது! பிரிட்டனிடமிருந்த கடைசி நாடாம் அது! அது சுதந்திரம் பெற்றபோது, மன்னருக்கு இந்த நிலை! சுவாசிலாந்து என்ற நாடு, தன்மன்னரை இப்படியாக்கி விட்டது! இதுதான் ஜனநாயகத்தின் பிரதான அம்சம் என்றால் யாரும் வருத்தப்படக் கூடாது!

68-ம், 38-ம்!

அறுபத்தெட்டு என்றால், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து எட்டாம் ஆண்டு என்று பொருளல்ல! அது ஒரு மணமகனின் வயது! சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் அழகுச் சிலைபோன்ற மனைவி ஜாக்குலின், இப்போது இரண்டாவதாக மணந்து கொண்ட ஓனாசிஸ் என்ற கோடீசுவரரது வயது அது! ஜாக்குலினுக்கு 38 வயது தான் ஆகிறதாம்! தனிமையைத்தாங்க முடியாமல் தான் மணந்துகொண்டார் என்றும் ஓனாசிஸ், ஜாக்குலினைக் காதலித்துக் கொண்டிருந்தார் என்றும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஜாக்குலினின் அன்னையார்கூட, இதேபோல இரண்டாம் மணம் புரிந்துகொண்டவர்தான் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் திருமணத்தை, அமெரிக்க கத்தோலிக்கக் குருமார்களும், அமெரிக்க மக்களும் எதிர்த்தாலும், துணை ஜனாதிபதி பதவி தனக்கு வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிவிட்ட எட்வர்டு கென்னடி "மண மக்களுக்கு என் வாழ்த்துக்கள்!" என்று வாழ்த்தி இருக்கிறாராம்! பெண்களுக்குக் காதல் உணர்வு விரைவில் குன்றிவிடும் என்பார்கள்! ஜாக்குலினுக்கு 38 வயது என்கிறபோது, 68 வயது மணமகன், அப்படி ஒன்றும் வயதானவர் அல்லதானே! காதல் உணர்வு ஒன்றுக்காக மட்டுமா திருமணம் செய்து கொள்ளப்படுகிறது! இல்லையே! எத்தனையோ காரணங்கள்! அதில் ஒன்று இருக்கக் கூடுமில்லையா இந்தத் திருமணத்துக்கு!

ஏழுமலையான் ஏமாந்தார்!

திருப்பதி ஏழுமலையானுக்குக் கூட தமிழக அரசுப் பரிசுச் சீட்டின்மேல் மோகம் ஏற்பட்டிருக்கிறது. தன் பக்தர்கள் மனதில் புகுந்து தனக்கும் பரிசுச் சீட்டு வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில், 66-பரிசுச் சீட்டுகள் அவருக்குக் காணிக்கை செலுத்தப் பட்டிருக்கின்றன! தமிழக அரசின் பரிசுச் சீட்டு திட்டப் படி முதல் குலுக்கலில் பெரும்பாலும் ஏழைகளே பரிசு பெற்றிருக்கிறார்கள்! தனக்குக் கிடைத்த 66 சீட்டுக்களில் ஒன்றுக்குக்கூட எந்தப் பரிசும் விழவில்லையே என்று ஏழுமலையான் வருத்தப்படத் தேவையில்லை. தனக்கு ஆயிரம், ஆயிரமாக இதுபோல் பக்தர்கள் காணிக்கை செலுத்தவேண்டும் என்று ஒவ்வொரு மாதமும் அனுக்கிரகம் செய்யவேண்டும்! ஏனென்றால் பரிசுச் சீட்டின் லாபத் தொகை முழுதும் தமிழக மக்களின் சுகாதார நலனுக்குத்தான் செலவு செய்யப்படவிருக்கிறது! இதனால் பரிசு விழவில்லையே என்று யாரும் (ஏழுமலையான் உட்பட) வருந்தவேண்டியதில்லை!

ராஜிமணாளன்—தொகுத்தவை.

தாமெய்த எண்ணிய எல்லாவற்றையும் எண்ணியவாறு. பெற வேண்டுமாயின், எண்ணியவற்றினைத் திண்மையுடன் முயல்வதே வழியாம்.

—குறள் (666)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம ரூ. 5

மலர் 5 27—10—68 இதழ் 14

விஞ்ஞான அறிவு வேண்டும்

இந்த இருபதாம் நூற்றாண்டை விஞ்ஞான வளர்ச்சியின் பொற்காலம் என்று வருணித்தால், அது மிகைப்பட்டதாக விருக்க முடியாது.

உலகின் பல நாடுகளும், விஞ்ஞானத் துறையில் புதிய புதிய சாதனைகளைச் செய்து காட்டி, அவற்றை ஆக்கச் சக்திக் குரியதாகவும் பயன்படுத்த வழிகோலி விட்டிருக்கிறது.

ஒரு நாடு விஞ்ஞானத் துறையில் உயர்ந்து நிற்கிறபோது, அந்நாட்டின் அறிவுத் திறனும் மேம்பட்டு நிற்கிறது என்றுதான் பொருள் கொள்ள முடியும்.

விஞ்ஞான அறிவின் முதிர்ச்சி காரணமாகவே மக்கள் இன்று, வானொலிப் பெட்டி, தொலைக் காட்சி அமைப்பு, தொலை பேசி முறை, தானியங்கி இயந்திரம் முதலானவைகள் மூலம் பெரும் பயன் நுகர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞான அறிவு வளர்ச்சித் துறையில் போட்டி கடுமையாக, கடுமையாக, வான வெளியையே தன் வயப்படுத்திக் கொள்ளும் காரியங்களும்கூட கடுவேகமாகிக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

விஞ்ஞான அறிவின் வளர்ச்சியை யொட்டி, அந்நாட்டின் பொருளாதார வளமும் சிறப்புறுவது கண்கூடாகக் காணக் கிடைக்கின்ற உண்மையாக விருக்கிறது.

பூமியிலிருந்தபடி, விண் வெளியி லிருக்கின்ற ஒரு கோளம், இத்தனை ஆயிரம் அல்லது இலட்சம் கிலோ மீட்டர் சுற்றளவாக இருக்கிறது என்று அனுமானித்துச் சொல்லிவிடத்தக்க அளவுக்குக்கூட அறிவு விரிவடைந்திருக்கிறது—ஆராய்ச்சித் திறனால்.

சந்திர மண்டலத்தில் தங்கம் கிடைக்கக்கூடும்—அது பூமண்டலத்து தரத்தைவிட உயர்ந்ததாகவும் இருக்கக்கூடும் என்றெல்லாம்கூட கண்டுபிடித்துச் சொல்கிறார்கள்—காரணம் அவர்களது அறிவு அத்துறையிலே பெருகி நுணுகி நுணுகி ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

மேலைக் கடலின் ஒரு தீவில் நின்றுகொண்டு, கீழைக்கடலின் கோடியிலுள்ள ஒருநாட்டையே முழுதுமாக அழித்தொழித்துவிட முடியும் என்று அறைகூவல் விடுக்கப்படுகிறது—விஞ்ஞான அறிவு அங்கே ஆக்கம் பெற்றிருக்கிற காரணத்தால்!

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இந்தியப் பிரதமர் நீரோடையொன்றில் உல்லாசப் படகமர்ந்து இன்ப உலா வந்தால், அடுத்த இருபது நிமிடத்தில் சென்னையில் அதனைப் படத்தோடு பிரசுரித்து விடக்கூடிய அளவுக்குக்கூட விஞ்ஞானம் தன் ஆற்றலைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

எல்லாம் எந்த நாட்டில்? விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் மேனாடுகளுக்குச் சொந்தமானது என்றுதான் பெருமைபேசிக்கொள்ள முடிகிறதே ஒழிய, உலகத்தின் பொதுப்பயனுக்காக, இந்தியத் துணைக்கண்டம் எதனை அறிமுகப்படுத்தி இருக்கிறது?

இங்கேயும் அணுகுண்டு செய்யலாம்! ஹைட்ரசன் குண்டு செய்யலாம்! என்று பேசப்படுகிறதே ஒழிய, அதில் முழு அளவும் திறனும் மிகுந்து காணப்படுகிறதா என்ற தேர்வில் வெற்றி பெறுவோர் இருக்க முடியுமா என்பதுவே ஐயத்துக் குரியது தான்!

இந்தியாவின் சார்பில், சர். சி. வி. ராமன் சில அனுமானங்களைக் கூறி இருக்கிறார்; அணு ஆராய்ச்சித் துறையில் பாபா என்பார் அணுவாற்றல் திறன் மிகுந்து காணப்பட்டார் என்றெல்லாம் பெருமை பேசிக்கொள்ள நாம் கூச்சப்படுவதில்லை.

ஒரு புதிய கண்டுபிடிப்பை உலகத்துக்கு வழங்கிய பெருமைக்குச் சொந்தக்காரர்களாய் நாம் இருக்கிறோமா?

வெட்கத்துடன் தலைகுனிந்து கொள்ளத்தான் வேண்டும். காரணம், இந்தியத் துணைக்கண்டம், உலகத்தின் போட்டியில் கலந்துகொள்ள இன்னமும் தயாராகவில்லை. தயாராகவில்லை என்பதில் ஆயத்தமாவது இருக்கிறதா என்றால் அதற்கும் 'இல்லை' என்ற பதிலையேதான் பெறவேண்டியிருக்கிறது.

அடிமட்டத்தில் இந்தியா, இந்தத் துறையிலிருப்பதற்குக்காரணம், இது பற்றிய அறிவை வளர்க்கும் எந்த முயற்சியையுமே செய்யாமலிருப்பது தான்.

கல்வி அடிப்படையிலேயே இதனை வளர்த்துக் கொண்டுவந்தால்தான், சிறந்த—தனியறிவு மிகுந்தவர்கள் ஒரு சிலரையாவது நாம் பெற முடியும்.

மாறாக, இருக்கின்ற வாய்ப்புக்களைக் கொண்டு முட்டி மோதி, தன் திறமையை ஒருவர் வெளிப்படுத்திக் காட்டும்போது, 'அது திறமை மிக்கதுதான்' என்று ஏற்றுக்கொள்ளும் "அறிவாற்றல்"கூட பஞ்சமாகி இருக்கிறது.

இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் அரிகோவிந்த கொரானா என்பவருக்கு அண்மையில் நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. இப்போது அவர் ஒரு அமெரிக்கக் குடிமகனாக இருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது. இதனைக் கண்ணுறும்போது இரத்தக் கண்ணீர் வடிக்கவே தோன்றுகிறது. இந்த விஞ்ஞானி, இந்தியாவிலே, ஒரு பேராசிரியராக விருக்கக்கூட முயன்றார் என்றும், ஆராய்ச்சிக்குத் துணைகோரினார் என்றும், இந்தியத் துறை இவர்பால் காட்டிய அலட்சியமே இவரை, அமெரிக்கக் குடிமகனாக்கியது என்றும் அறிகிறபோது, ஆத்திரம் மிகத்தான் செய்யும்.

டாக்டர் அரிகோவிந்த கொரானா மருத்துவத் துறையில், உயிரியல் இரசாயன ஆராய்ச்சியில், பாரம்பரிய நிர்ணயத் தத்துவத்துக்கான ஒரு கண்டுபிடிப்பைக்காட்டி இருப்பதற்காக இவருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது.

இதுபோன்ற மேதைகளின் அறிவு இந்தத்துணைக் கண்டத்துக்குப் பயன்படாமல் மேனாடுகளுக்குப் பயன்படுகிறதென்றால்—அதற்கு இந்தியாதான் காரணம்!

இனியும் இந்தியத்துணைக்கண்டம் இத்துறை அறிவில், அலட்சியம் காட்டுவது என்பது, வளரும் நாடு என்ற தலைப்பின் கீழ் இருக்கும் தகுதியை இழந்துவிடும் என்று எச்சரிக்கை செய்வது நம் கடமையாகும்.

★

கல்லறைக்குப் பூமாலை!

—புலவர் பொன்னிவளவன்—

கொத்துப்பூ மலர்கின்ற காலை நேரம்
குமிழம்பூ மூக்கழகி கமலா வந்தாள்!
"சித்திரமே! செங்கரும்பே! தேனே! மானே!
சிங்காரப் பூங்குயிலே! எனது வாழ்க்கைப்
பத்திரம்நீ! உயர்ந்தகதாப் பாத்தி ரம்நீ!
பக்கத்தில் வந்திடடி! வாடி!" என்றேன்!
முத்துப்பல் மங்கையவள் முகம்சு ளித்தாள்;
முணுமுணுத்தாள்; 'தொல்லை!'எனத் தொணதொ ணத்தாள்!

"கட்டியவன் அழைக்கின்றேன்; மறுக்க லாமா?
கண்மணிநீ என்மனைவி! வாடி!" என்றேன்!
"சட்டினியும் இட்டிலியும் அழைக்கு தங்கே!
சாப்பிடுங்கள்! பார்த்திடலாம் பிறகு!" என்றாள்
"மட்டமனம் கொண்டவளே! எதற்க ழைத்தேன்?
மனதில்நீ எதைநினைத்தாய்? உனக்கு நித்தம்
கட்டியபூ தருவதற்குப் பூக்கா ரிக்குக்
காசுதந்தேன் என்றுசொல்ல அழைத்தேன்!" என்றேன்!

"ஏன்எனக்குப் பூவெல்லாம்?" என்றாள் மங்கை
எல்லையில்லாப் பேரெரிச்சல் எனது நெஞ்சில்!
"நான்செத்தா போய்விட்டேன்? குடும்பப் பெண்நீ!
நங்கைஉன் கூந்தலுக்கு வேண்டும் பூக்கள்!
ஏன்டிஅதை மறுக்கின்றாய்?" என்று கேட்டேன்!
"எதற்கத்தான் போடுகின்றீர் வெட்டிக் கூச்சல்?
வீண்கூச்சல் போடாமல் 'எதற்கு?' என்று
விவரத்தைக் கேளுங்கள்; சொல்வேன்!" என்றாள்.

"சொல்என்றேன்! பேரறிஞர் அண்ணா பற்றிச்
சொல்கின்றீர் மணிக்கணக்கில்! எங்கள் கட்சி
எல்லோரும் பாராட்டும் கட்சி என்று
ஏராளம் தாராளம் பேசு கின்றீர்!
பொல்லாத இந்தியினை எதிர்த்து முன்புப்
போராடி நீர்கூடச் சிறைக்குச் சென்றீர்!
நல்லதுதான்! எனக்குப்பூக் கொடுக்கு முன்னால்
நல்லவர்நீர் மறந்துவிட்டீர் ஒன்றை!" என்றாள்!

"கதையளக்கத் தேவையில்லை! எதைம றந்தேன்?
காரிகையே! உடனேசொல்!" என்று கேட்டேன்!
"எதையென்றா கேட்கின்றீர்? இந்திக் காக
இன்னுயிரைத் தந்திட்ட சின்னச் சாமி
கதைமறந்து போயிற்று! சிவலிங் கத்தின்
கல்லறையை மறந்திட்டீர்! இந்த நாட்டில்
புதைகுழியில் இருப்போரை மதிப்ப தெல்லாம்
புல்தானே! பூவல்ல!" என்று சொன்னாள்.

"சொல்லடிநீ! அதற்கென்ன இப்போ தென்றேன்!
சுந்தரியாள் என்முகத்தை உற்றுப் பார்த்தாள்!
' நல்லதமிழ் வாழ்வதற்கு உயிர்கொ டுத்த
நல்லவரை நாம்நித்தம் நினைப்போம்! அந்தக்
கல்லறைக்குப் பூமாலை முதலில்! பின்னர்
காரிகைஎன் கூந்தலுக்குப் பூக்கள்!" என்றாள்!
புல்லரித்துப் போயிற்று எனது மேனி!
பூமாலை வாங்கிவர எழுந்து சென்றேன்!

புறப் பொலிவு

பேசும்மணி

பிரபல எழுத்தாளர் பொய்யாமொழி அவர்களை சென்னையில் நான் சந்தித்துப்பேசிக்கொண்டிருந்தபோது 'நானும் ஒரு எழுத்தாளனாக விரும்புகிறேன்' என்றேன்.

"ஏன் திடீரென்று உமக்கு அப்படித் தோன்றிற்று?" என்றார்.

அவர் கேட்ட கேள்விக்கு ஒன்றும் புரியாமல் நான் விழித்தேன்.

"இல்லை, எழுத்தாளர்களாக வேண்டுமென்று யாரும் விரும்பி எழுத்தாளர்களாகவில்லை. எழுத்தாளர்கள் அவர்களை அறியாமலே எழுத்தாளர்களாகி விடுகிறார்கள். பாடகன் பாடிக்கொண்டே இருப்பான். கவிஞன் கவிகளை இயற்றிக் கொண்டேயிருப்பான். எழுத்தாளன் தான் எண்ணியதை எப்போதும் எழுதிக் கொண்டேயிருப்பான். தங்களுக்காகவோ அல்லது பிறருக்காகவோ அல்ல. அப்படிச் செய்வது அவர்களது இயல்பு. அதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என்று சொல்லிவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்து ஏதோ நினைத்துக் கொண்டவராய் 'அதுசரி தம்பி, நீங்கள் எழுத்தாளராக விரும்புவது புகழுக்காகவா அல்லது பணத்துக்காகவா?" என்றார்.

நான், 'இரண்டுமில்லை. ஏதோ எழுதத் தோன்றுகிறது' என்றேன்.

"அந்த வரையில் சந்தோஷம். எழுத வேண்டுமென்று தோன்றுவதை எப்போது உடனே பேனாவைப் பிடித்து எழுத ஆரம்பித்து விடுகிறீர்களோ அப்போதே நீங்கள் எழுத்தாளர்தான். ஏனென்றால் எழுத்தாளன் தான் எழுதவேண்டுமென்று நினைத்ததை எழுதாமல் தூங்கமாட்டான். ஒருவன் எழுத்தாளனான பிறகு அவன் எத்தகைய பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்பது வேறொரு பிரச்சினை. அது வாசகர்கள் தரவேண்டிய தீர்ப்பு; எழுத்தாளனுடையது அல்ல" என்றார்.

"இப்படிக் கேட்பதற்கு என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் இன்று பிரபல எழுத்தாளராக இருப்பதற்கு ஏதாவது காரணமிருக்குமா? என்றேன்.

"பெரும்பாலும் அப்படி எழுத்தாளர்களுக்குக் காரணம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனால் என்னைப் பொருத்த வரையில் ஒரு காரணம் உண்டு. இன்றைக்குச் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் நான் எழுத ஆரம்பித்தேன். எழுத்தாளனாக எழுதினேனென்று சொல்வதைவிட ஒருஎழுத்தராகவே நான் எழுதினேன் என்று சொல்லலாம். ஆம். அப்போதெல்லாம் நான் மேலெழுந்தவாரியாகச் சிந்தித்ததையும், கற்பனை செய்ததையும் கட்டுரையாகவும், சிறு கதைகளாகவும் எழுதினேன். வத்தல் குழம்பு, வெங்காய சாம்பார், பிஞ்சு வெண்டைக்காய், நெல்லூர் அரிசி, மாமியார்களின் தர்பார் தலை தீபாவளி, வரதட்சணையின் கொடுமைகள். இவைகள் கூட என் எழுத்துக்களில் இருந்து தப்பமுடியாது. எனக்காகவோ அல்லது என் கருத்தின் சிறப்புக்காகவோ அவைகள் பிரசுரிக்கப்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. எழுத்துலகில் என் முன்னோர்கள் என் குடும்பத்திற்குச் சேர்த்து வைத்துவிட்டுப்போன சிறப்பும் செல்வாக்கும்தான் காரணமாக இருந்திருக்கவேண்டும்.

அப்போது வேலப்பன் என்ற ஒரு சிறந்த எழுத்தாளர் இருந்தார். அவரது கதைகளும், கட்டுரைகளும் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களைக்கவர்ந்துகொண்டிருந்தன. அவர் கூறும் ஒவ்வொரு கருத்தும் மிகவும் தத்ரூபமாக இருந்தது. கதாபாத்திரங்களை சிருஷ்டித்து அவர் எழுதினாரென்று சொல்லுவதைவிட அவரே கதாபாத்திரங்களாயிருந்து எழுதினாரென்று சொல்வதுதான் சரி. எழுத்துலகில் அவர் மலையாகவும் நான் மடுவாகவுமிருந்தோம். அப்படி 'அவரால் எழுத முடிவதற்குக் காரணம் எதுவாயிருக்குமென்று நான் சிந்தித்துப் பார்த்தேன். ஒன்றும் எனக்குப் புலனாகவில்லை. படிப்பிலும் பணத்திலும் அவரைவிட நான் எத்தனையோ மடங்கு உயர்ந்திருந்தேன், இருந்தும் என்ன பயன்? என் எழுத்துக்கள் யாரையும் கவராதபோது என் ஏமாற்றம் பொறாமையாக உருவெடுத்து என் உள்ளத்தைத் தீய்த்தது. அவரது கற்பனைகளையும், கருத்துக்களையும் குறை கூறிவந்தேன். அதைவிட பொறாமை வேறு என்ன செய்ய முடியும்?

அன்று ஒருநாள் காலஞ்சென்ற பழைய மாபெரும் எழுத்தாளர் ஒருவரின் ஞாபகார்த்த ஆண்டு விழாவிற்கு வாசகர்கள் என்னை ஒரு பேச்சாளராக அழைத்திருந்தனர். நானும் ஒப்புக்கொண்டு சென்றேன். என் மனைவியும் தமிழ் இலக்கியத்



தில் பெருத்த ஆர்வம் கொண்டவளாக இருந்ததால் என்னுடன் அவளையும் விழாவிற்கு அழைத்துச் சென்றேன். மேடைக்குச் சென்று உட்கார்ந்தபோதுதான் வேலப்பனும் ஒரு பேச்சாளராக என் பக்கத்தில் அமர்ந்திருப்பதைக் கவனித்தேன். என்னைக் கண்டதும் அவர் முதலில் வணக்கம் செலுத்தினார். அப்போதெல்லாம் எனக்கு ஒரு அகங்காரமிருந்தது. காரணம் என் தகப்பனார் ஒரு பெரிய எழுத்தாளராகயிருந்தவர். எனது தமயனார் ஒருவர் பெரிய அரசியல்வாதியாக இருந்தார். ஜீவநதியைப் போல் என்றும் வற்றாத செல்வச் செழிப்பில் என் குடும்பம் இருந்தது. இவைகளெல்லாவற்றையும் வைத்துக்கொண்டுதான் என்னை நான் எடைபோட்டுக் கொண்டேனே தவிர, என் அறிவைவைத்து அல்ல.

சிறிதுநேரம் கழித்து வேலப்பன் அவர்கள் என்னைப்பார்த்து "தங்கள் உடன் வந்த அம்மையார் யாரோ?" என்றார்.

"என் மனைவிதான்" என்றேன்.

"அதைத்தான் நானும் நினைத்தேன். மிக்க மகிழ்ச்சி. உம்மனைவியாருடன் பேசிக்கொண்டிருப்பது என் மனைவி எழிலரசி" என்றார்.

"அவர்களுக்கு இது எதிர்பாராத முதல் சந்திப்பு. மிக்க மகிழ்ச்சி" என்று சொல்லிவிட்டு அந்த அம்மையாரை சற்றுக் கவனித்தேன். கண்ணைப் பறிக்கும் வனப்பும் விதவிதமான வேலைப்பாடுகளும் அமைந்தஉயர்ந்தரக காஞ்சிபுரத்துப் பட்டுச் சேலையை உடுத்திக் கொண்டு அவ்வம்மையார் என் மனைவியின் அருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். என் மனைவியும் அன்று வெகு நேர்த்தியான பட்டுச்சேலையைத்தான் அணிந்திருந்தாள். ஆடையைப் பொறுத்தவரையில் இருவருக்கும் வித்தியாசமில்லை. ஆனால் மற்றவைகளில்? என் மனைவியோ ஒரு எழில்மிக்க ராணியாய் அங்கு அமர்ந்திருந்தாள். அந்த அம்மையாரைப் பார்ப்பதற்கே எனக்கு மிகவும் அருவெறுப்பாகவும், சமயத்தில் பரிதாபமாகவும் இருந்தது. தாழ்ந்த நெற்றி, தடித்த உதடு, கொஞ்சம் சப்பை மூக்கு, முன்னும் பின்னுமாய் வளர்ந்து தூக்கிய பற்கள். அம்மைத் தழும்பேறிய முகம். கருடப்பார்வை. மெலிந்த உருவம், கருத்தமேனி, இவைகளைக் கொண்ட இந்த எழிலரசியை எப்படி இந்த வேலப்பன் காதலித்து மணந்தாரோ? வேலப்பன் அப்படி ஒன்றும் மிகுந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தவருமல்ல. வளமும் செழிப்பும் வாய்ந்த ஒரு சமுதாயத்தில் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவரே. இளம் வயதிலேயே எழுத்துலகில் புகுந்து பேரும் புகழும், பணமும் சம்பாதித்துக் கொண்டவரே. எத்தனையோ அழகு வாய்ந்தப் பெண்கள் அவருக்கு மனைவியாக வரக் காத்திருந்தபோது ஏன் இவர் இப்படிப்பட்ட ஒரு பெண்ணை மணந்து கொண்டார்? பெயர் எழிலரசி என்று இருப்பதாலோ? என்று நினைத்துக்கொண்டு எனக்குள் நானே சிரித்துக்கொண்டேன். இவ்விஷயத்தில் வேலப்பனுக்கு அறிவு போதாதென்றும், அழகை ரசிக்கும் தன்மை அவருக்குத்தெரியாதென்றும் அவர் எழுதுவதற்குத் தவிர வேறு எந்த வேலைக்கும் தகுதியற்றவரென்றும் நினைத்துக் கொண்டேன். என் மனைவியின் பேரழகிலும் அவளது இலக்கிய அறிவிலும் நான் பெருமையும் கர்வமும் அடைந்தவனாய் மிகுந்த பரிதாபப் பார்வையுடன் வேலப்பனைத் திரும்பிப்பார்த்தேன். அவர் ஏதோ குறிப்புகள் தயார் செய்து கொண்டிருந்தார்.

சொற்பொழிவு ஆரம்பமாயிற்று. வேலப்பன் காலம் சென்ற எழுத்தாளரின் 'புறத்தோற்றம்' என்ற நாவலைப் பற்றியும் அவரது சமுதாய சீர்த்திருத்தக் கருத்துக்களைப் பற்றியும் மிகத் திறம்படக் கூடியிருந்தோர் கரகோஷம் எழுப்பி மகிழும் வண்ணம் பேசி அமர்ந்தார். நான் சற்று அதற்கு முன் நினைத்தெல்லாம் என் உள்ளத்திலிருந்து உணர்ந்தவர்போல் புறத்தோற்றத்தைக் கண்டு சிந்திப்பவர்கள். கற்பனை செய்பவர்கள் பேசுபவர்கள் சமுதாயத்துக்கு நல்ல எழுத்தாளர்களாகப் பணியாற்ற முடியாது' என்பதை வலியுறுத்தி அவர் பேசிய போது என்னைச்சாட்டையால் அடிப்பதுபோலிருந்தது அந்த அடியில உள்ளம் தளர்ந்த நான் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தபோது என்னை பேசும்படி தலைவர் கேட்டுக்கொண்டதும் நான் எழுந்து ஏதோ பேசினேன் என்பதைவிட உளறிக்கொட்டினேன் என்றே சொல்லவேண்டும்.

கூட்டம் கலைந்துவிட்டது. தலைவரிடமும், மற்றவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு மேடையிலிருந்து இறங்கி ஒரு காலை கீழே எடுத்து வைத்தேன். ஆ! என் காலை யாரோ குத்திக் கிழத்ததுபோல் உணர்ந்தேன், குனிந்துபார்த்தேன். என் முழங்காலுக்குக் கீழே கண்டங்கால் தசை அங்கு பலகையில் அடிக்கப்பட்டிருந்த ஒரு ஆணியால் கிழிக்கப்பட்டு இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. என் பின்னே வந்தவர் உடனே குனிந்து தன் கையால் இரத்தம் வராமல் அழுத்திப் பிடித்துக்கொண்டார். பீறட்ட ரத்தம் நிற்கவில்லை. 'ஒரு கந்தல் துணி—ஒரு கந்தல் துணி' என்றார் இரத்தத்தை அழுத்திக் கொண்டிருந்தவர். கந்தல் துணிக்கு எல்லோரும் இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டிருந்தனர். என் மனைவி 'ஐயோ,' 'ஐயோ' என்று அலறிய வண்ணம் 'துணி—துணி. ஒரு துண்டுத்துணி, சீக்கிரம் கொண்டு வாருங்கள்' என்று சொல்லிக் கொண்டே அவளும் இரத்தம் வரும் இடத்தைக் கையால் அழுத்தி பிடித்துக்கொண்டாள். 'ஐயோ, இரத்தம்

அதிகமாக வருகிறதே, எங்கும் ஒரு துண்டுத்துணி கிடைக்கவில்லையா?' என்று பதறினாள். 'டர்—டர்' என்ற சப்தம் கேட்டது. அடுத்தக் கணம் வேலப்பன் மனைவியார் உடுத்தியிருந்த அவ்விலையுயர்ந்த காஞ்சிபுரத்துப்பட்டுச் சேலையில் ஒரு பகுதி என் காலைச் சுற்றி துளி ரத்தம்கூட வராமல் கட்டிக் காத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் வியப்பிலும் ஆச்சரியத்திலும் மூழ்கிவிட்டனர். என் மனைவி தன் தலையைத்தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தாள். என்னால் அப்போது ஒன்றும் சிந்திக்க முடியவில்லை. என் இழிவான உள்ளத்தைதான் அந்த அம்மையார் கிழித்து எறிந்து விட்டாரே. கிழிக்கப்பட்டது உயர்ந்த பட்டுச் சேலையல்ல. என் கீழ்த்தரமான உள்ளம் தான்! அப்போது வேறொரு புதிய உள்ளம் என்னுள் உருவாகிக் கொண்டிருந்ததை நான் உணர்ந்து கொண்டிருந்தேன்.

என்னை டாக்டரிடம் அழைத்துச் செல்ல முயன்று கொண்டிருந்தார்கள் என்னைச் சுற்றியிருந்தவர்கள். அந்த அம்மையார் என் மனைவியிடம் ஒன்றும் பயப்படாதே, அவருக்கு எல்லாம் சீக்கிரம் குணமாகிவிடும்' என்று சொல்லிக்கொண்டிருந்தார். டாக்சியில் என்னை ஏற்றி உட்காரவைத்த வேலப்பனைப் பார்த்து "எனக்காக அநியாயமாய் ஓர் உயர்ந்த பட்டுச் சேலையையே கிழித்துவிட்டாரே உமது மனைவியார்?' என்றேன்.

"அப்படிச் சொல்லாதீர்கள், அந்த பட்டுச்சேலை போனால் இன்றைக்கு வேறொன்று வாங்கிவிடலாம். இதைவிட மிக உயர்ந்ததையும் பெறலாம். ஆனால் எழுத்தாளராகிய நீங்கள். —எனக்கு நண்பராகிய நீங்கள் போய்விட்டால் உங்களைத் திரும்பவும் பெறமுடியாதே? அது கெட்டது, நீங்கள் போய் சீக்கிரம் சிகிச்சை செய்துகொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு என்னிடம் விடைபெற்றுக் கொண்டார்.

அன்றுமுதல் நான் ஒரு புதிய மனிதனுனேன். ஏன்? ஒரு புதிய எழுத்தாளனுனேன். நான் முதலில் அந்த அம்மையாரின் புறத் தோற்றத்தைக் கண்டு எனக்குள் எள்ளி நகையாடினேன். ஆனால், அந்த அம்மையாரின் அகத்திலிருந்த விலைமதிக்க முடியாத, வார்த்தைகளால் சொல்ல முடியாத ஒரு பெரும் ஒப்பற்ற பொருளை என்னால் உணரமுடியாமல் போய்விட்டதே. புறத் தோற்றத்தைத்தானே என்னால் காணமுடிந்தது. சிந்திக்க முடிந்தது. அழியாத அகத் தோற்றத்தை என்னால் அறிய முடியவில்லையே. அதிலிருந்து நான் ஒரு இரகசியத்தைத் தெரிந்துகொண்டேன். எந்த விஷயத்தில் நாம் ஒன்றுமில்லை என்று நினைக்கிருேமோ அந்த விஷயத்தில் தான் நாம சிந்திக்க வேண்டியது, எழுதவேண்டியது அதிகமிருக்கிறது என்றுணர்ந்தேன். அதில் தான் பலருக்கும் புலப்படாத பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. எந்த விஷயத்தில் எல்லாமிருக்கிறது, தெளிவாகத் தோன்றுகிறது என்று நினைக்கிருேமோ அதில்தான் உண்மையிலேயே ஒன்றும் இல்லை. அதைப் பற்றித்தான் எல்லாவற்றையும் எல்லோரும் ஏற்கனவே சொல்லியாகிவிட்டதே! தெரிந்து கொண்டாகிவிட்டதே!! பூமிக்குள் தங்கம் இருப்பதுபோல, ஆழ்கடலுக்குள் விலையுயர்ந்த முத்துக்கள் அடங்கியிருப்பதுபோல மக்களுக்கு சாதாரணமாகப் புலப்படாத புரிந்து கொள்ளமுடியாத பிரச்சினைகளில், விஷயங்களில் பொருள்களில், கருத்துக்களில் அடங்கியுள்ள தத்துவத்தை, உண்மையை, மறைந்து புதைந்து கிடக்கும் இரகசியத்தை எடுத்துக் கூறுவதே எழுத்தாளனின் கடமை என்றுணர்ந்தேன். இந்த அடிப்படையில்தான் என் கருத்துக்களைத் தொகுத்துக் கதையாகவும், கட்டுரையாகவும் எழுதலானேன். இப்போதும் எழுதிக்கொண்டேயிருக்கிறேன். என் காதில் 'டர்—டர்' என்ற அந்தப் புனித சங்கம் இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அதை கேட்டுக்கொண்டே நான் எழுதிக்கொண்டு வருகிறேன். அதனால்தான் என்னவோ என் எழுத்துக்களும், கருத்துக்களும் மக்களைக் கவர்ந்து வருகின்றன. வேலப்பனை என் குருவாகவே மானசீகமாக நான் ஏற்றுக்கொண்டேன், அவர் எந்த முக்கிய அடிப்படையில் தன் வாழ்க்கைத் துணைவியை தேர்ந்தெடுத்தார் என்பதிலிருந்தே அவர் பிரபல எழுத்தாளரானதற்கான காரணத்தை நான் எழுத எழுத, சிந்திக்க சிந்திக்க, தெரிந்து கொண்டேன்" என்ருர்.

நான் அவரிடம் விடைபெற்றுக் கொண்டபோது 'உங்களிடம் பேசியதை நான் ஒரு சிறுகதையாக எழுத அனுமதி கோருகிறேன்' என்றேன்.

"தாராளமாக எழுதுங்கள். எனது குருவும் அவரது வாழ்க்கைத் துணைவியாரும் இப்போது இவ்வுலகில் இல்லை என்பதை நான் சொல்ல மறந்துவிட்டேன். ஆனால் என் உள்ளத்தில் எப்போதும் அவர்கள் இருப்பதாகவே நான்உணர்கிறேன்" என்ருர்.

நானும் ஒரு சிறுகதையாக இதனை எழுதிவிட்டேன்: புறப்பொலிவுஎன்ற தலைப்பில். இதில் நீங்கள் அகப்பொலிவைக் கண்டாலும் சரி, புறப்பொலிவைக் கண்டாலும் சரி!' என் கடமை, அகமும் புறமும் ஒன்றச் செய்வதுதானே!

சூரியன் வெடித்து பூமி அழியப்போகிறதாம்!

ஒளிமயமான ஒரு நாளில் சூரியன் வெடிக்கப்போகிறதாம்.

ஆனால் சுமார் 500 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு அவ்விதம் நிகழும்போது மனிதன் இருப்பானேயாகில் அவனுக்குப் போதிய முன்னெச்சரிக்கை கிடைக்கும். ஏனெனில் அப்போது சூரியன் இப்போது இருப்பதைவிட 400 மடங்குப் பெரியதாகிவிடுமாம்!

பிரிட்டிஷ் கணித மேதையான இயன் ராக்ஸ்பார்க் வெகு காலத்திற்குப் பின் பூமிக்கு நிகழப்போகும் அழிவைக் குறித்து —"மனிதன் தப்பிக்க விரும்பினால் அவன் பூமியின் ஒரு பகுதியை ராக்கெட்டின் எரிபொருளாகப் பயன்படுத்தி அதன் மூலம் பூமியின் இதர பகுதியைச் சூரியனிடமிருந்து வெகுதூரம் போகும்படிச் செய்யவேண்டும். அல்லது மனிதன் பூமியைவிட்டே போய்விட வேண்டும் என்றும் கருத்தறிவித்துள்ளார்.

சாதனைக்கு சில சான்றுகள் காணீர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் சுப்பிரமணியம் இந்த மாநகராட்சித் தேர்தல் நேரத்தில் நமக்கு முன் வைத்திருக்கும் கேள்வி கடந்த ஒன்பது ஆண்டுகளாக தி. மு. கழகம் மாநகராட்சி பொறுப்பு ஏற்றுநடத்துகிறதே—என்ன சாதித்து விட்டது?—என்பதுதான்.

மதிப்பிற்குரிய ஒரு பொறுப்பில் அவர் இருக்கின்ருர் என்ற காரணத்தால் கடந்த ஒன்பது ஆண்டுகளில் மாநகராட்சியில் நாம் என்ன சாதித்தோம் என்பது பற்றிய சில விவரங்களை மட்டும் கூறுகிறேன்.

1959-ஆம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை தி. மு. கழக நிர்வாகம் பாதாளச் சாக்கடை வசதி—கழிவு நீர்த் திட்டம் ஆகியவற்றுக்காக செலவழித்த தொகை மூன்றேகால் கோடியாகும்!

மழைக்காலத்தில் மழைநீர் தெருவில் தேங்கி விடாதபடி அப்புறப்படுத்தக் கட்டப்படும் கால்வாய்த் திட்டங்களுக்கு செலவிடப்பட்ட தொகை ஒருகோடியே பதினைந்து லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் ரூபாயாகும்!

பொதுமக்களின் வசதிக்காக குளிக்கும் அறைகள்—கக்கூஸ்கள் இந்த ஒன்பது ஆண்டுகளில் நூற்றுக் தொண்ணூற்று எட்டு அமைக்கப்பட்டன. இதற்கான மொத்த செலவு பத்தரை லட்ச ரூபாயாகும்.

கழிவு நீரை அகற்ற ஸ்யூவேஜ் எனும் கழிவுநீர் கால்வாய் 187 மைல் அமைப்பதற்கு இதுவரையான செலவு 82 லட்சம் ரூபாயாகும்! பல கோடி ரூபாய்கள் செலவிட்டுச் செய்யவேண்டிய திட்டம், இருப்பினும் படிப்படியாக நாங்கள் இதைச் செய்து வருகிறோம்.

குழந்தைகள் நலப் பிரிவுக்காக இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் பதினொரு லட்சத்துப் பதினையாயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் உயர்நிலைப் பள்ளிகள் இருபத்தாறு அமைக்கப்பட்டுள்ளன, துவக்கப் பள்ளிகள் ஐம்பத்தி இரண்டு அமைக்கப்பட்டுள்ளன, விளையாட்டு மைதானங்கள் பத்தொன்பது அமைக்கப்பட்டுள்ளன.

1958 வரை காங்கிரஸ் இந்த மாநகராட்சியில் இருபது வருடம் நிர்வாகம் நடத்தியிருக்கிறது. தி. மு. கழகம் ஒன்பதே ஆண்டுகள்தான் நிர்வாகம் நடத்தியிருக்கிறது.

இந்த இரண்டு நிர்வாகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமேயானால் இருந்தது எதையும் நாங்கள் கெடுத்து விடவில்லை; இல்லாதவைகளைத் தான உருவாக்கியிருக்கிறோம்.

இருபதாண்டுக் கால மாநகராட்சி நிர்வாகத்தில் அவர்கள் அமைத்த ஆரம்பப் பள்ளிகள் இருநூற்றுத் தொன்னூற்றி இரண்டு, ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறது துவக்கப் பள்ளிகள் முன்னூற்று நாற்பத்தி இரண்டாக உயர்ந்திருக்கின்றன.

ஒன்பதாண்டு கால தி. மு. க. நிர்வாகத்தில் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு 43500. குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்,

அவர்களது இருபதாண்டு காலத்தில் இந்த மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் இரண்டே இரண்டுதான்! எங்களது ஒன்பது ஆண்டு காலத்தில் அது இருபத்தி எட்டாக உயர்ந்தது.

காங்கிரசுக்காரர்கள் முன்பு பழி சுமத்தியதுபோல் நாங்கள் பொறுப்பிற்கு வந்து பள்ளிக்கூடங்களையா மூடிவிட்டோம்? இல்லை! பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறோம்.

சென்னை நகரத்தில் அவர்களுடைய இருபதாண்டு கால ஆட்சியில் சிமிண்ட்—காங்கிரீட் ரோடுகளின் நீளம் இருபத்தோரு மைல்களாகத்தான் இருந்தன.

இந்த ஒன்பதாண்டுகால நிர்வாகத்தில் அந்தச் சாலைகளின் நீளம் 81 மைல்களாக உயர்ந்தன.

அவர்களது இருபதாண்டுகால நிர்வாகத்தில் தார் கலந்த ரோடுகள் நானூற்று அறுபத்தேழு மைல்களாக இருந்தன.

எங்களது ஒன்பது ஆண்டுகால நிர்வாகத்தில் ஐநூற்று எண்பத்தாறு மைல்களாக உயர்ந்தன.

விளக்குகள் மொத்தமாக அவர்கள் ஆட்சியில் இருந்தது இருபத்தோராயிரம். அது இருபத்தெட்டாயிரம் விளக்குகளாக எங்கள் நிர்வாகத்தில் உயர்ந்தது.

மெர்குரி விளக்குகள் அவர்களது இருபதாண்டு காலத்தில் ஐயாயிரத்து நூற்று அறுபது விளக்குகள் அமைக்கப்பட்டன.

ஒன்பது ஆண்டுகால நிர்வாகத்தில் அந்த விளக்குகளின் எண்ணிக்கை பதிமூவாயிரத்து நானூற்று இருபத்தேழாக உயர்ந்தது.

குடிதண்ணீர் அவர்கள் காலத்தில் உபயோகிக்கப்பட்ட அளவு பதினோராயிரத்து இருநூற்று எட்டு மில்லியன காலன் ஆகும்!

அது நமது காலத்தில் பதிமூவாயிரத்து ஐநூற்று முப்பத்திமூன்று மில்லியன் காலனாக உயர்ந்தது.

குடிதண்ணீர்க் குழாய்களின் நீளம் அவர்களது இருபதாண்டுகால நிர்வாகத்தில் எண்ணூற்று எழுபத்தி ஏழு கிலோ மீட்டராக இருந்தது. அது ஆயிரத்து நூற்றி ஏழு கிலோ மீட்டராக எங்களது ஒன்பது ஆண்டுகால நிர்வாகத்தில் உயர்ந்தது.

ஏழை நடுத்தர மக்களுக்குப் பெரிதும் பயன்படும் கல்யாண மண்டபங்கள் காங்கிரசாரின் இருபதாண்டு கால மாநகராட்சி நிர்வாகத்தில் ஒன்றுகூட அமைக்கப்படவில்லை—

ஆனால் கழக நிர்வாகத்தில் ஆறு கல்யாணமண்டபங்கள் அமைக்கப்பட்டன.

பொதுமக்களுக்கு கோடைகாலத்தில் இலவசமாகக் குடிநீர் வழங்கும் குளிர்நீர் சாதனங்கள் காங்கிரசின் இருபதாண்டுகால நிர்வாகத்தில் ஒன்றுகூட அமைக்கப்படவில்லை.

ஆனால் கழக நிர்வாகத்தில் ஐந்து குளிர்நீர் சாதனங்கள் அமைக்கப்பட்டன.

மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் ஏழை பிள்ளைகளுக்குப் புத்தகங்கள்—கற்பலகைகள்—எழுது பொருட்கள் காங்கிரஸ் காலத்தில் இலவசமாக அளிக்கப்பட்டதில்லை.

ஆனால் கழகம் பொறுப்பேற்ற பிறகுதான் சென்ற ஆண்டு புத்தகங்கள்—கற்பலகைகள் எழுது பொருட்கள் இலவசமாக எல்லா பிள்ளைகளுக்கும் தரப்பட்டன. அதற்காக சென்ற ஆண்டு செலவழிக்கப்பட்ட தொகை ஆறு லட்சரூபாய்; இந்த ஆண்டு அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை ஒன்பது லட்சம் ரூபாய்.

காங்கிரஸ் கட்சியினர் மாநகராட்சிப் பொறுப்பேற்று ஆண்ட இருபது ஆண்டுகளில் மாநகராட்சிக்குச் சொந்தமாயிருந்த பள்ளிக்கட்டிடங்கள் நூற்றிஐம்பத்திஒன்று.

இன்றைய தினம் கழகம் பொறுப்பேற்று ஒன்பது ஆண்டுகாலம் ஆண்ட பிறகு மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கும் பள்ளிக்கட்டிடங்கள் இருநூற்று முப்பத்தி நான்கு.

இன்னும் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று கூறினால் அதைப் புரிந்துகொள்ள முடியும். எதுவுமே செய்யவில்லை என்று உண்மைகளை மூடி மறைக்காதீர்கள்!

—கலைஞர் மு. கருணாநிதி.

கேள்வி? பதில்

1. தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டம், மத்திய அரசால் தடை படுத்தப்பட்டுவிடுமா என்ன?

நிச்சயம் இதுமட்டும் நடக்காது. ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், கேரளா முதலிய மாநிலங்கள் இதுபோல் பரிசுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. மக்கள் ஆதரவும் இவற்றிற்குப் பெருந்துணையாக இருக்கிறது! சட்ட ரீதியாகக்கூட இதனைத் தடைபடுத்த முடியாதென்று தமிழக சட்ட அமைச்சரும், பஞ்சாப் சட்ட அமைச்சரும் எடுத்துக் காட்டி இருக்கிருர்கள். அரசியல் சட்டம் குறுக்கே இருக்கிறது என்று சொல்லி கை நீட்ட வந்தால், அந்தச் சட்டத்தைத்தான் மாற்றவேண்டி இருக்கும். அரசியல் சட்டம் என்பதுகூட, நிர்வாக வசதிக்காக வகுத்துக் கொள்ளப்பட்ட ஒன்றுதானே!

2. காங்கிரஸ் கலைக்கப்பட்டுவிட வேண்டும் என்ற கருத்துக்கு உங்கள் ஆதரவு உண்டா?

காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டும் என்று, மொழிப் பிரச்னை தொடர்பாக ஒருமுறை 'காஞ்சி' யில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அதுவும் கலைக்கப்படும் என்று ஒரு நாடகம் நடத்த வேண்டும் என்றுதான் அதில் கோரப்பட்டிருந்தது. முழுதாகக் கலைத்துவிட வேண்டும் என்று அல்ல! அப்படிக் கலைக்கப்பட்டுப் போனால் குடிமுழுகிப் போவது எதுவுமில்லைதான். ஏழுக்கு மேற்பட்ட எதிர்க் கட்சிகள் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் காங்கிரசில் இருக்கின்ற சிலதுகளுக்குப் பிழைப்பற்றுப் போகும்! ஏடும் எழுத்தும் மட்டுமே வயிற்றை வளர்த்துவிடும் நிலை இன்றில்லை. அதுகள் பிழைப்பதற்காவது அப்படி ஒரு நிறுவனம்(!) இருக்க வேண்டாமா?

3. தமிழக எஞ்சினியரிங் பட்டதாரிகள் வேலை இல்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாகி இருப்பது தெரியுமா?

எஞ்சினியரிங் பட்டதாரிகள் தமிழகத்தில் மட்டும் வேலையற்று இருக்கவில்லை இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இந்த நிலை இருக்கிறது. இதனைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் பட்டப்படிப்புக்கு மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்று மத்திய அரசு, உத்திரவு அனுப்பி இருக்கிறது. பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் ஆந்திரத்தில் மட்டும் இருக்கிருர்கள் தெரியுமா!

4. தெருக்களைச் சுத்தமாக வைத்திருப்பவர்களுக்கு மட்டும் வாக்களிக்க வேண்டும் என்று உதவி குடியரசுத் தலைவர் சென்னையில் பேசி இருப்பது எதைக் குறிக்கிறது?

சென்னை வாக்காளர்கள் அனைவரும் கழகத்துக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று அவர் சொல்லாமல் சொல்லி இருக்கிருர். "தெருக்களைச் சுத்தம் செய்வோர்" என்ருல், கழகத்துக்காரர்கள்தானே! கழகத்தார் தானே அடிக்கடி தலைவர்கள், அமைச்சர்கள் தலைமையில் இது போன்ற பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுகின்றனர்! காங்கிரஸ் கூட இனி இதுபோல் செய்ய முயற்சிக்கக் கூடும்! முன் வருகிற வரையில் இலாபந்தானே!

7. கடந்த காலத்தில் தி. மு. க. நிருவாகத்தில் ஊழல்களே மலிந்திருந்தன என்று காங்கிரஸ் கூறுகிறதே! எப்படி மறுக்கிறீர்கள்?

1959-ல் முதன் முதல் சென்னை மாநகராட்சியைக் கழகம் கைப்பற்றியது. 1967 வரையில் மாநில அரசு, காங்கிரஸ் பக்கமே இருந்தது. 1966-ல் காங்கிரஸ் திருநெல்வேலி, அருப்புக்கோட்டை முதலிய நகரசபைகளைக் கலைத்தது. அதற்குமுன் மாநகராட்சியைக் கலைக்கும் அதிகாரத்தை அது சட்டமன்றத்தில் நிறைவேற்றிக்கொண்டது. இவை எல்லாம் செய்த காங்கிரஸ் மாநகராட்சியை அப்போது ஏன் கலைக்கவில்லை? கலைத்துவிட வேண்டிய நிலையில் கழக நிர்வாகம் இல்லை என்பதால் தானே! இப்போது வந்து, ஊழல்! ஊழல்!! என்ருல், யாரிடம் அது? என்று மக்கள் கேட்க வேண்டாமா?

8. இந்தியைத் தென்னாட்டவர் எதிர்க்கவில்லை என்று நிஜலிங்கப்பா கூறி இருப்பதற்குத் தங்கள் பதிலென்ன?

இந்தியும் ஒருமொழி துணைக் கண்டத்தில் சில பகுதி மக்களால் பேசப்படுகிறது. அதனை தமிழ்நாடு ஏன் எதிர்க்க வேண்டும்? "இந்தி ஒழிக!" என்பது தென்னாட்டின் கோஷமல்லவே! அதனால் நிஜலிங்கப்பா சொல்வது சரிதான்! தமிழகம் இந்தியை "ஏற்கவில்லை" என்று அவர் கூறி விடவில்லையே!

9. காங்கிரசை எதிர்த்து வேலை செய்யும் "துரோகிகள்" யாரும் காங்கிரசில் இல்லையா?

இல்லாமல் என்ன! அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இந்தத் "துரோகிகள்" இருக்கத்தான் செய்கிருர்கள். ஆனால் காங்கிரசில் இதனைக் காரணம் காட்டி களை எடுக்கத் தொடங்கினால், கட்சியில் ஆளே இருக்கமாட்டார்களே!

★

திருநாள் முடியட்டும்!

அன்புள்ள நண்பா!

மாநகராட்சித் தேர்தல் வந்தாலும் வந்தது, காங்கிரஸ்காரர்கள் தம் ரத, கஜ, துரக, பதாதிகளுடன் போர்க்களத்தில் குதித்தாலும் குதித்தார்கள்! செய்திகளை எந்த அளவுக்கு உண்டாக்கிக் காட்ட முடியும்? உண்மைகளை எப்படி எப்படி யெல்லாம் மூடி மறைக்க முடியும் என்கிற கலைச் சிறப்புக்குக் காட்சி மாண்பு காட்டுகிற கலை கைவந்திருப்பதனைத் தயக்கமின்றிக் காட்டத் தொடங்கி இருக்கிறுர்கள்!

உண்மையில் பொய்யைக் காண்பதென்பது ஒரு கலை. பொய்யில் உண்மையைப் பிரித்துக் காட்டுவது என்பதும் ஒரு திறமைதான்! அந்தத் திறமையை காங்கிரசுக்காரர்கள் மிக மிகத் திறம்படக் கையாளத் தொடங்கி இருக்கிறுர்கள் என்ற அளவுக்கு நம் பாராட்டுதலைப் படைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

நண்பா! மாநகராட்சியில் ஊழல் ஊழல் என்றெல்லாம் சந்துக்கு சந்து நின்று சிந்திசைக்கும் சீர்த்தி கண்டு குமுறி கடிதம் எழுதி இருக்கிறுய். உன் உணர்ச்சி புரிகிறது!

எந்தப் பக்கத்தில் ஊழல் இருக்கிறது? என்று எவரேனும் எதிர்த்துக் கேட்டால், கேட்டவர் தூரத்திலே தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கும் காட்சியை நீ காணவில்லையா?

பெருந்தலைவர் என்று வருணிக்கப்படும் காமராசரும், அவரைக்கூட ஆட்டிப் படைக்கும் சிறு தலைவர் என்று கூறுமல் குமுறிக்கொண்டிருக்கும் நிலைக்குரியாரான சுப்பிரமணியமும் இந்தத் தேர்தலில் முழுமூச்சாக இறங்கி வீட்டுக்கு வீடு, ஏறி இறங்குகிருர்கள்! வேண்டுகோள்களைப் படைத்துக் கொள்கிருர்கள்.

அதிலே நமக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. அப்படித்தான் அவர்கள் தெருத் தெருவாகத் திரிய வேண்டும்—ஓட்டு வேட்டைக்காக.

மேடையிலே வந்து சில நேரங்களில் "முழக்கம்" என்ற பேரால் எதனையோ சிந்துகிருர்களே. அதிலே மட்டும் கொஞ்சம் கவனம் செலுத்திப்பார்! மெய்யைப் பொய்யாக்கிக் காட்டும் கலையில் கைவந்த தன்மை சட்டென்று புலப்படும்.

"நவசக்தி" என்ருேர் ஏடு—காங்கிரசின் முழுமுதற் பிரசார பீரங்கி என்று நம்பப்படுவது. உண்மையைச் சொல்ல வேண்டுமானுல்—பொய்களின் உற்பத்திச் சாலை என்றே பெயரிடவேண்டும்! அது வேண்டாம் இப்போது. அந்த ஏடு—

"அக்டோபர் 27-ம் நாள் சென்னை நகர வரலாற்றில் ஒரு முக்கியமான நாள். சொல்லப்போனுல் சென்னை நகர வரலாற்றிலே மட்டுமல்ல —தமிழக வரலாற்றிலேயே அந்த நாள் முக்கியமானதொரு நாளாகக் குறிக்கப்பட இருக்கிறது"

என்று தலையங்கத்தின் தொடக்கமாகத் தொடங்கி தேர்தலில் காங்கிரசுக்கு வாக்களிக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

கழக வேட்பாளர்களும், கூட்டணித் தோழர்களும் கூடத்தான் வாக்குக் கேட்டு, ஆதரவைத் திரட்டிக் கொண்டிருக்கிருர்கள். அதுபோல் காங்கிரசும் கேட்கிறது; புரிந்துகொள்கிருேம்!

ஆனுல் நண்பா, இந்தத் தேர்தல் காங்கிரசுக்கு மிக மிக முக்கியமான ஒரு தேர்தல் என்று எந்த அடிப்படையில் கூறி இருக்கிறது? தமிழக வரலாற்றிலேயே இது எப்படி முக்கியத்துவம் பெறப் போகிறது?

தென்சென்னையில் நடைபெற்ற இடைத் தேர்தலின்போது, "இத்தேர்தல் அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களுக்கும், காமராசருக்கும் ஒரு பலப் பரீட்சை என்றே சித்திரித்து பிரசாரம் செய்தார்கள்.

தேர்தல் முடிவு வெளிவந்த பின்னர், காமராசர் வலிமைத் தேர்வில் தோற்ருர்! பலமான காயமடைந்தார்!

சங்ககிரி தேர்தலின்போதும், தென்காசித் தேர்தலின்போதுங்கூட இப்படித்தான் தமிழகத்தின் தலைவிதியையே நிர்ணயித்துக் காட்டப்போகிற ஒரு தேர்தல் என்று வலுவான பிரசாரம் மேற்கொண்டார்கள்! காங்கிரசின் வளர்ச்சியையும், கழகத்தின் தேய்வையும் எடுத்துக் காட்டப் போவதாகக் கூறி வந்தார்கள்.

முடிவு வெளியான பின்னர், மூலையில் போய் முடங்கிக்கொண்டார்கள்! யாருக்குத் தேய்வு—என்று தங்களுக்குத் தாங்களே அடிதடியில் இறங்கினுர்கள்.

ஒரு இடைத்தேர்தல் வந்தாலும், நகராட்சித் தேர்தல் வந்தாலும் அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுப்பதும், தோல்வியால் துவண்டுபோய் அளவுக்கு மீறி தங்களைத் தாங்களோ அன்றி, வாக்காளர் பெருமக்களையும் தாக்கத் தொடங்குவதும் வாடிக்கையாகக் கொண்டு விட்டிருக்கிருர்கள்!

நண்பா, காமராசர் பேசி இருக்கிருராம் சென்னையில்:

(1) சாலைகள் இன்னமும் பழுதுற்று இருக்கின்றன

(2) போலீஸ்காரர்களின் கரங்கள் தர்மத்துக்கு விரோதமாகக் கட்டப்பட்டுக்கிடக்கின்றன.

(3) 4 கோடிப் பேர் வாழும் தமிழ் நாட்டில் 25 லட்சம் பேருக்கு மட்டும் படி அரிசியா?

(4) ஆயிரக்கணக்கான விவசாயிகளை ஏமாற்றி, பல லட்சம் மக்களுக்கு இல்லாமல் சில லட்சம் மக்களுக்கு மட்டுமா படியரிசி? என்று.

இந்த இதழின் நடுப் பக்கத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மாநகராட்சி மன்றம் இதுவரை சாதித்தவைகளுக்கு ஒரு பட்டியலே தந்திருக்கிறார். ஏட்டில் அல்ல! மேடையில்! தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஏடுகளிலும், இதழ்களிலும் அவை வெளியிடப் பட்டிருக்கின்றன பொய்யின் உற்பத்திச் சாலையில் தவிர!

அவற்றையெல்லாம் ஒன்று—படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும்; அல்லது படிக்கச் சொல்லி, பக்க நின்று—கேட்டுப் புரிந்துகொள்ளவேண்டும்.

குற்றச் சாட்டுக்கள் கூறு முன்பு அதற்கு அடிப்படையான சில ஆதாரங்களையும் கொண்டிருப்பதுதான் தர்க்க முறைக்கு ஒத்ததாக இருக்கமுடியுமே தவிர, வாய்க்கு வந்தவைதான் பேச்சு என்றால், அது இந்தத் தமிழ் நாட்டில் இனிமேல் செல்லுபடியாகாது!

25 லட்சம் பேருக்கு மட்டும்தான் கழகம் படி அரிசிப்போடுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு—

இந்த இருபத்தைந்து லட்சம் மக்களும் சென்னை, கோவை பகுதிகளில்தான் இருக்கிறார்கள்—இந்த இரண்டு பகுதிகளிலும் காங்கிரசுக் கட்சிதான் கட்டாய ரேஷன் முறையைச் செயல்படுத்தியது என்று தரப்பட்ட விளக்கம் காமராசரின் காதிலும், விழவில்லை! மண்டையிலும் நுழையவில்லை.

அதோடு, வாங்கும் சக்தி மிகவும் அதிகம் படைத்த அந்த இரு பகுதிகளுக்கும் அந்த சக்தியைக் கட்டுப்படுத்தி விட்டால், விலைவாசிகள் நாடெங்கும் பரவலாக வீழச் செய்ய முடியும்.

—என்ற விளக்கம் காமராசருக்கும் புரியவில்லை, சுப்பிரமணியனாருக்கும் விளங்கவில்லை

"ஐயோ, விலை வீழ்ந்துவிட்டதே!" என்று அங்கலாய்த்துக்கொள்ள மட்டும்தான் தெரிந்தது!

விவசாயிகளுக்குக் கொள்முதல் விலையும் கூட்டிக் கொடுக்கவேண்டும் — படியரிசித் திட்டத்தை விரிவு படுத்தவும் வேண்டும் என்றால், இது முதல்தரமான அரசியல் மோசடி என்று—தமிழக ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களே காங்கிரசுக்காரர்களது மண்டையிலடித்துவிட்ட பிறகும் இந்த முகாரியை சென்னை மேடையில் முழங்குவதன் பொருள் புரியாமலா இருக்கிறது?

சாலைகள் பழுதுற்று இருக்கும் நிலையா? வளர்ச்சி நிலையா? பழுது ஏற்படுவதும், விரிவடைவதும் ஒன்றா? பழுது அவ்வப்போது ஏற்படுவது — பழுது பார்க்கக் கூடாது என்றா காமராசர் சொல்கிறார்?

போலீசாரின் கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்றால் பொருள் என்ன? காலிகளது ஆகஸ்ட் 1-ம் நாள் ஊர்வலத்துக்குப் பிறகு அதே சென்னையில் இதே காமராசர் பேசிய பேச்சுக்களின் தொகுப்பு வேண்டுமா என்ன?

"ஊரை ஏமாற்றிப் பிழைப்பவர்களுக்குப் பெருமையா?"

யாரைப் பார்த்து வினவுகிறார் இந்த வினா மூலம்?

தன்னைப் பார்த்தா? சுப்பிரமணியனாரைப் பார்த்தா? தான் வளர்த்துவிட்ட காங்கிரசுக் கட்சியையே பார்த்தா? கண்ணாடி முன்நின்று பார்த்துப் பேசினாரா? தெளிந்த நீரோடை முன்னின்றா?

வாக்காளர்களுக்கு இந்தச் சந்தேகம் வரக்கூடாது. ஏனென்றால்—

"ஏமாற்றியும்விட்டு, தைரியமாக வந்து ஓட்டும் கேட்கிறார்களே, அவர்கள் எவ்வளவு தைரியமுள்ளவர்கள்?"

என்ற வினாவையும் அடுத்துக் கேட்டிருக்கிறார்.

மக்களையும் ஏமாற்றிவிட்டு, அதனைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் மக்கள் என்ற மமதையில் வாக்குக் கேட்க வருவோர், வந்தோர் யார் என்பது வாக்காளர்களுக்குத் தெரியும்! அதனால் அவர் காங்கிரசுக்காரர்களைப் பார்த்துத்தான் இப்படிக்கேட்டிருக்க வேண்டும்! இல்லையென்றால் "பொய்" பேசுகிறார் என்றுதான் பொருளாகும்.

இவர்தான் என்னமோ மேதை என்று விட்டுவிடலாம்! படித்த மேதை சுப்பிரமணியனாரைத்தான் பாரேன் நண்பா!

"முறையான கழிவுநீர்த் திட்டம் இல்லாததால் கூவத்திலும் பக்கிங்காம் கால்வாயிலும் சாக்கடைக் கழிவு நீரைத் திறந்துவிட்டு பாயச் செய்கிறார்கள்"

எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசி இருக்கிறார். 1959ல் பதவிக்கு வந்த கழகமா இத்திட்டத்தைப் போட்டு செயல்படுத்தி கூவத்தில் நாற்றத்தைக் கொண்டுவந்து சேர்த்தது?

கழக அரசு அமைந்த பிறகல்லவா கூவம் நாற்றத்தைப் போக்கி, அதனைப் போக்குவரத்துக்குப்பயன்படுத்தும் திட்டத்தைக் கொண்டுவந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது?

ஏமாற்றிவிட்டு ஓட்டுக் கேட்பது யார்—புரிகிறதா நண்பா!

குடிநீர்ப்பிரச்னையையும் சுப்பிரமணியனார் தொட்டு விட்டிருக்கிறார். எதுவுமே செய்யவில்லை என்பதாக! மக்களை ஏமாற்றுவதாக!

காவிரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தையே முதன்முதல் 1959-ல் கழகம் தான் கொண்டுவந்தது. 1966 வரையில் காங்கிரஸ் அதனைத்தடுத்தது! 1967-ல் கழகம் கோட்டைக்குள் குடியேறியதும் தான் அத்திட்டம் மீண்டும் செயலுருப் பெற்று, இப்போது திட்டக் குழுவின் அனுமதியையும் பெற்று, செயல்பட வேண்டிய நாட்களை — எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

எனவே, நண்பா, கடந்த 19 மாத பிரிவை, ஏமாற்றத்தை காங்கிரசினால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை — மாநகராட்சியையாவது தம் பிடியில் சேர்க்க முடியாதா என்பதற்காக, பொய்களையே உண்மையாக்கிப் பேசும்கலையில் திறமையைக் காட்டிக் கொண்டு வருகிறது.

வரட்டும்! நவசக்தியின் விருப்பத்தைப்போல, வருங்காலக் காங்கிரசுக்கு ஒரு முடிவு கட்டுவதாக, இருக்கப்போகும் திருநாள் முடியட்டும்! அதுவே முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டட்டும்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

ஒலிம்பிக்கு விளையாட்டின் தோற்றம்

ஒலிம்பியேடு என்னும் சொல், கிரேக்க மொழியில் நான்கு ஆண்டு என்று பொருள். அதனால் தான் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக்கு விளையாட்டு நடைபெறுகிறது.

ஒலிம்பிக்கு விளையாட்டு 1200 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப் பட்டது என்று சொல்கிருர்கள். இதற்கு சான்று கி. மு. 776-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று செய்தித் தொகுப்பான பதிவுப் பத்திரங்களில் குறிப்புகள் உள்ளன.

'ஹெல்லாசி' என்ற நாட்டில் 'ஆல்பியஸ்', 'கிளாடியஸ்' என்ற இரு நதிகள் ஓடுகின்றன. இதன் அருகில் ஏற்பட்ட இடமே ஒலிம்பிக்கு விளையாட்டு ஆரம்பிக்கப் பட்டது எனலாம். இதை உண்மை என்று நிரூபிக்கப் பல கதைகள் உண்டு. அதில் இரண்டைமட்டும் உங்களுக்குச் சொல்கிறேன்.

கிரேக்க நாட்டு மன்னன் 'எலீஸ்' என்பவன் ஹெராக்கிளீஸ் என்ற ஒரு குற்றவாளியின் மன உறுதிக் கண்டு பிரமித்தவனுய் "நீ ஒரு பகல் பொழுதிற்குள் என்னுடைய மிகப் பெரிய குதிரைக் கொட்டிலைச் சுத்தம் செய்' என்று தண்டனை விதித்தான்.

அதற்கு அக்குற்றவாளி மன்னனைக் கேட்டான். மன்னு! நான் இக்காரியத்தைச் செய்து முடித்து விட்டால், அக்குதிரைக் கொட்டிலிருக்கும் குதிரைகளில் பாதியை எனக்குத் தருகிருயா'' என்று.

மன்னனும் சம்மதித்தான். அக் குற்றவாளி தன் கடுமையான உழைப்பால் ஆல்பியஸ் ஆற்றின் போக்கைக் குதிரைக் கொட்டிலின் வழியே போகும்படி வெட்டி விட்டான். வேகமாக வந்த நீர், கொட்டிலில் உள்ள அசுத்தங்களை நொடிப்பொழுதில் அகற்றி விட்டது. மன்னன் மகிழ்ந்தான்; ஆனல் குற்றவாளி கேட்ட பரிசைக் கொடுக்க மறுத்துவிட்டான். இதனுல் குற்றவாளி ஹெராக்கிளீஸ் கோபம் கொண்டு அம்மன்னனையே கொன்று விட்டு அந்நாட்டுக்கு அரசனுனன். மக்களை சமாதானப்படுத்தவும் தன் செயலை உலகறியச் செய்யவும் இவ் ஒலிம்பிக்கு விளையாட்டைச் 'சீர்கா' என்று பெயர் வைத்துத் துவக்கினன் என்று சொல்வது உண்டு.

கிரேக்க மன்னன் ஒருவனின் மகள் 'இப்படேமியா' என்று பெயர். இவள் நல்ல அழகி. மன்னன் தன் மகளை "எந்த நாட்டு இளவரசன் பாதுகாப்பு நிறைந்த அரண்மனையிலிருந்து சிறையெடுத்துச் செல்கிருனே அவனுக்கே மணமுடித்து வைக்கிறேன்'' என்று பறையறைவித்தான். 13 இளவரசர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வி கண்டார்கள். கடைசியில் 'பிலோப்பு' என்ற இளவரசன் வெற்றி கண்டான். இந்த மகிழ்ச்சியை 'பிலோப்பு' கொண்டாட ஒலிம்பிக்கு, விளையாட்டைத் துவக்கினன் என்றும் சொல்வதுண்டு.

ஒலிம்பிக்கு விளையாட்டு உலகப் புகழ் அடையக் காரணம், அவ் விளையாட்டுகள் மேலான முறையில் நடைபெற்றதால்தான்! இதில் குற்றவாளிகள், அக்குற்றவாளிக்கு உறவினர்கள் கலந்துகொள்ள அனுமதி கிடையாது. அப்பொழுது நடந்த ஒலிம்பிக்கு விளையாட்டுகள் ஒருநாள் காலைப்பொழுதில் தொடங்கி ஐந்து நாட்கள் நடக்கும். இவர்கள் மதப்பற்று மிக்கவர்கள். ஆட்டக்காரர்கள் முதலில் ஜீயஸ் கடவுளை வழிப்பட்டு விட்டுத்தான் மைதானத்தில் இறங்குவார்கள்.

மக்கள் உட்கார்ந்து ஒலிம்பிக்கு விளையாட்டை ரசிப்பதற்கு மைதானத்தைச்சுற்றி சலவைக் கல்லால் படிக்கட்டுகள் அமைத்திருக்கிருர்கள். சுமார் 6000, மக்கள் தாராளமாக உட்காரலாம். இதனுள்ளேதான் 195 மீட்டர் நீளம் 29 மீட்டர் அகலம் கொண்ட விளையாட்டு அரங்கம் அமைக்கப் பட்டது. தேரோட்டங்கள் நடைபெற 733 மீட்டர் நீளம், 369 மீட்டர் அகலம் கொண்ட இடம் ஒதுக்கியுள்ளார்கள்.

உலக அதிசயங்களில் ஏழாவது அதிசயமாகக் கருதப்படுவது, ஒலிம்பியாவில் உள்ள ஜீயஸின் உருவச்சிலை. இச்சிலையின் உயரம் 40 அடி. இதைத் தங்கத்தாலும், தந்தத்தாலும் செய்திருக்கிருர்கள்.

பெலஸ்டிரா என்ற மணல்மேடு இதன் அருகில் உள்ளது. இந்த இடத்தில்தான் மல்லர்களின் பயிற்சி நடைபெறும்.

இவ்விளையாட்டுகள் கி. பி. 394-ஆம் ஆண்டில் நிறுத்தப் பட்டன. இதற்குக் காரணம் மண்ணுசைப் பிடித்த போரேயாகும். இரு பூகம்பங்கள் ஏற்பட்டு இவ் விளையாட்டு அரங்கம் மண்ணேடு மண்ணுக மறைந்தது.

1300 ஆண்டுகளுக்குப்பின் 1829-ல் பிரெஞ்சும், 1825-ல் ஜெர்மணியும் புதையுண்ட ஒலிம்பியாவைத் தோண்டி வெளிப்படுத்த முயன்றன.

'இவாஞ்சலியா ஜப்பார்' என்ற கிரேக்கன் பிகமுயற்சி செய்து 1859-ல் மீண்டும் ஒலிம்பிக்கு விளையாட்டை ஆரம்பித்து வைத்தான். ஆனல் தோல்வியே கண்டான்.

இவனுக்குப்பின் 1896-ம் வருஷம் ஏதென்சிலிருந்த ஒலிம்பிக்கு விளையாட்டு அரங்கத்தின் அருகில் புதியதாக ஏற்படுத்தப்பட்டது. ஒலிம்பிக்கு விளையாட்டின் முழு உரிமை உலகத்திற்குச் சொந்தமாகி விட ஒரு கழகம் நிறுவப்பட்டது. அக்கழகத்தின் தலைவர் காபர்டீர். இவருக்குப்பின் லாடப்போர் என்பவர் தலைவராக இருந்தார்.

அமைதி அமைதி என்று எல்லா நாட்டுத் தலைமையிடமும் சொல்லிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தில், நட்புக்கு இலக்கணமாக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனைத்துலக நாட்டினரும் இங்கு கூடி உலக அமைதிக்கு வழிவகுத்துக் கொடுக்கிருர்கள் என்று சொன்னுல் மிகையாகாது!

—ஆர். வெங்கடகிருஷ்ணன்

பெண்!

வானத்தை வில்லாக வளைக்கவும்,
மணலைக் கயிருகத் திரிக்கவும், ஏழு
கடலை ஒரேயடியாகத் தாண்டவும்
ஆண்கள் தயாராக இருக்கிருர்கள்.
இதெல்லாம் எதற்காக என்ருல்
பெண்ணின் கடைக்கண் பார்வைக்
காக!

—உமர்கயாம்.

1. கேட்டதும் கிடைத்ததும்!

சீவித் தீட்டிய தேக்குமரத்தைப் போல் காவி படிந்த சிவந்த மண் அது. அதிலே பிறந்து செழுமையுடன் வளர்ந்திருந்த முந்திரிச் செடிகள் அந்த மண்ணுக்கு மேலும் ஒரு உயிரோட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. இராமநாதபுரம் சீமையையும், புதுக்கோட்டை சமஸ்தானத்தையும் இணைக்கும் கிராப்பு மேடு ஆமை ஓட்டைப் போல் அரை வட்டத் தோற்றத்துடன் அந்த முந்திரிப் பண்ணைக்குத் தலைமை தாங்கி இருந்தது. அதோ, போர்க்களத்து யானை மீதிருக்கும் அம்பாரியைப் போல் அந்தக் கிராம்பு மேட்டில் எழுந்து நிற்கிறதே கட்டிடம்—அரண்மனை, அதுதான் கீழா நிலைக் கோட்டை ஜமீன்தாரின் பரிபாலன மாளிகை. ஒரு காலத்தில் அந்த மாளிகை சீமான்களுக்கு விருந்து மண்டபமாகவும், சமஸ்தானாதிபதிகளுக்குக் களிப்பூட்டும் உல்லாசபுரியாகவும் இருந்து வந்தது. இன்று அந்த மாளிகை மாடோட்டிகள் இளைப்பாறித் தாயம் விளையாடும் மரத்தடி மண்டபமாக இருக்கிறது.

காரைக்குடியிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் குறுக்குச் சாலையில், அறந்தாங்கிக்கும் புதுவயலுக்கும் இடையில், வாழ்க்கையை இழந்த விதவையைப்போல், இடிந்த குதிரை லாயங்களையும், நொறுங்கிப்போன யானைக் கொட்டகைகளையும் இன்றும் பார்க்கலாம்; அவைகளைக் கடந்து உள்ளே போனால் படிக்கட்டுகளுடன் கூடிய பாதாள குளியல் அறைகள் தெரிகின்றன. அதற்கப்புறம் சென்றால் ஆடலரங்கம், அந்தப்புர அறைகள் —என்று இப்படி அரச வம்சத்து அடையாளச் சின்னங்கள் அச்சுக் குலைந்து காணப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட கோட்டையும் கொத்தளமும் ஜமீன் அழிவிற்குப் பின் கவனிப்பாரற்று இடிந்திருக்குமா? அல்லது எதிரிகளின் கண்ணுக்கு இலக்காகித் தாக்குண்டு தரைமட்டமாகி இருக்குமா? மாடு மேய்ப்போரைக் கேட்போமா? மதிற்சுவரில் முளைத்திருக்கும் துளசிச் செடிகளைக் கேட்போமா? தூர்ந்துபோன மைய மண்டபத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் வௌவால்களைக் கேட்கலாமா? முதிர்ந்து கிழண்டு போன சிற்பியைப்போல் அந்த அரச மரத்தடியில் தூங்கிக்கொண்டிருக்கும் அந்தக் கிழவனையே கேட்போமே!

* * *

கீழா நிலைக்கோட்டை ஜமீன் கீர்த்திக்குக் குறைவில்லாதது.



அந்த ஜமீனுக்கு அதிபதியாக இருந்த திருவரங்கத்துரை கலையை ரசிப்பதில் முகவையை ஆண்ட கிழவன் சேதுபதிக்குச் சமமானவர். பேராட்ட வித்தைகளை அனுபவிப்பதில் தஞ்சை சரபோஜி மன்னனுக்கு இணையானவர். புதுக்கோட்டை அரசரும் சிவகெங்கை அரசரும் திருவரங்கத்துரைக்கு நெருங்கிய நண்பர்கள். இவர்கள் ஐவரும் அடிக்கடி சந்திப்பார்கள். தஞ்சையிலிருந்து சிவகெங்கை, முகவைக்குச் செல்வோரும் புதுக்கோட்டையிலிருந்து தஞ்சைக்குச் செல்வோரும் கவர்ச்சி மிக்க கீழாநிலைக் கோட்டையில் தங்கி இளைப்பாறிப் போவது ஜமீன் மரபாகிவிட்டது. எல்லோருக்கும் விருந்தளித்து நட்பை உறவாக்கிக்கொண்ட இந்தக் கீழாநிலைக்கோட்டை ஒரு ஏழையின் வயிற்றெரிச்சலால் — ஒரு பெண்ணின் சாபத்தால் இப்படி இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

திருவரங்கத்துரைக்கு மூத்தமகன் மங்களசாமி, இளையமகன் அபிமன்யு. அம்புறாத் தூணியில் ஒன்றாக இணைந்து கிடக்கும் அம்புகளைப்போல் இருவரும் ஒற்றுமையாகத்தான் வளர்ந்தார்கள். ஒரே ரத்தத்தில் விளைந்தவர்கள், ஒரே மாளிகையில் வாழ்ந்தவர்கள். ஒரே உணவைப் பகிர்ந்து உண்டவர்கள், ஒரே தாயை அம்மா என்று அழைத்தவர்கள், ஆனால் குணத்தினால் மட்டும் எப்படிப் பிரிந்தார்கள் என்றுதான் யாராலும் கண்டு

பிடிக்க முடியவில்லை.

மங்களசாமிக்கு, திருவரங்கத் துரையின் அக்காள் மகள் மதுராம்பிகை துணைவியானாள். அவள் தான் வீட்டுக்கு மூத்த மருமகள். அந்த அரண்மனையில் மதுராம்பிகைக்கு மதிப்பும் மரியாதையும் பெருகியிருந்தது.

மதுராம்பிகை முறைக்கு மருமகள் ஆனாலும் திருவரங்கத்துரையும் அவரது மனைவியும் மதுராம்பிகையை பட்டத்துராணியாகவே மதித்தார்கள். மதுராம்பிகை சின்ன வயதிலிருந்து மங்களசாமியோடு ஓடியாடித்திரிந்தவள். திருவரங்கத் துரையின் அக்காள் மகள் என்பதைத்தவிர, அவளுக்கு வேறு சரித்திரம் இல்லை. அதனால் அவள் அடக்கம் நிறைந்த "வீட்டுக்காரி" யாக சின்ன வயதிலிருந்தே பயிற்றுவிக்கப்பட்டு விட்டாள்.



தமிழர் மரபு விசித்திரமானது. ஒவ்வொரு கட்டத்திற்கும் அதன் நிலையும் குணமும் மாறுகிறது. மதுராம்பிகை, திருமணமாகும் வரை அபிமன்யுவோடு அளவளாவுவாள். அவனைக் கேலி செய்வாள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு அபிமன்யுவோடு பேசுவதேயில்லை. அபிமன்யு மட்டும் அந்த மரபை விட்டுக் கொடுத்துவிட்டானா? அவனைக் காட்டிலும் அவளுக்கு ஒரு வயது குறைவு "மதுரம்" என்று தேனொழுகக் கூப்பிடுவான். அவளோடு விளையாடுவான். மல்லிகைப் பந்தலுக்கு அழைத்துச் செல்லுவான். அவளுக்கு எட்டாத பூவை இவன் பறித்துக்கொடுப்பான். சிலவேளைகளில் அபிமன்யுவுக்கு அவள் சோறு பரிமாறுவாள். அந்த அபிமன்யு, மதுராம்பிகை அண்ணனுக்குத் துணைவியானவுடன 'அண்ணி' என்று அழைப்பதைத் தவிர மறுவார்த்தை பேசுவது கிடையாது. மதுராம்பிகைக்கு எதிரில் உட்கார்ந்துபேசமாட்டான். மரியாதைக் குறைவான வார்த்தைகளை உபயோகிக்கமாட்டான். அண்ணனுக்குக்கொடுத்தமரியாதையில் முக்கால் பகுதி அண்ணிக்குக் கொடுத்தான். இப்படியே மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன.

மனிதனுக்கு அவன் தகுதிக்குத் தகுந்த கவலைகள் பிறக்கின்றன. திருவரங்கத்துரையின் தகுதிக்கு எதிரியைப் பற்றிக் கவலையில்லை. ஏலக்காய்த் தோட்டமும் முந்திரிப் பண்ணையும் விளைச்சலைத் தருமா என்ற கவலையும் இல்லை. திருமணமாகி மூன்றுண்டுக் காலமாகியும், மதுராம்பிக்கைக்குக் குழந்தை இல்லையே என்ற கவலைதான் அவரை உருக்கி எடுத்தது. விருந்துகள் வழக்கம்போல் நடக்கின்றன. வரவேற்புகள் முறைப்படி நிகழ்கின்றன வேற்று நாட்டு விருந்தாளிகளோடு திருவரங்கத்துரை வழக்கம் போல் இரத்தினக் கம்பளத்தில் உட்கார்ந்துதான் உணவுகொள்கிறார். சிரிக்கிறார்; இருந்தாலும் அவர் மனதிலே ஒரு கவலை உரிந்து கொண்டே இருக்கிறது. ஆளில்லாத நேரத்தில் அரவம் காட்டும் புற்றுப் பாம்பைப்போல் அவர் தனிமையில் இருக்கும்போது அந்தக் கவலை அவரைச் சுற்றிக்கொண்டேயிருக்கிறது.

அரச வம்சத்திலும், ஜமீன் பரம்பரையிலும், என்னதான் செல்வம் இருந்தாலும். குழந்தை இல்லாக் குறையை மற்றவர் கேலி செய்வது இயல்பாகிவிட்டது. திருவரங்கத்துரை வாழ்ந்த காலம், இதிகாச காலமல்ல; புத்திரபாக்கியத்திற்கு யாகம் செய்வதற்கும். மந்திரத்தினலான மாம்பழத்தைச் சாப்பிடுவதற்கும், ஏழு கடல் தாண்டி எங்கோ இருக்கும் ரோஜாவைப் பறித்து வருவதற்கும்! மனோரஞ்சிதச் செடியில் மறைந்து திரியும் பூ நாகத்தைப் போல் விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்திருக்கும் திருவரங்கத்துரை இருதயத்திற்குள் அந்தக் கவலை நெளிந்து கொண்டிருந்தது.

கீழாநிலைக் கோட்டை ஜமீன் மாளிகையில் எப்படியும் குழந்தையின் அழுகுரல் கேட்க வேண்டும். அந்தக் குழந்தையை மார்போடு அணைத்து மகிழ வேண்டும் தனக்குப் பின்னால் ஜமீனில் கொடி பறந்து கொண்டிருக்க வேண்டுமானால் பேரப் பிள்ளைகள் தேவை என்பதை அவர் தீர்மானித்தார். அதற்கு அவருக்குத் தெரிந்த ஒரே வழி அபிமன்யுவுக்குத் திருமணம் செய்து வைப்பதுதான்.

அபிமன்யு தந்தையிடம் நெருங்கியறியாதவன். எதையும் அன்னையிடம் கேட்பான். அல்லது அண்ணனிடம் கேட்பான். திருவரங்கத்துரை சில கட்டங்களில் அபிமன்யுவை மாதக் கணக்கில் கூடப் பார்க்காமல் இருந்திருக்கிறார். ஒட்டுமில்லாமல் உறவுமில்லாமல் கவலையற்ற வாழ்க்கையில் மிதந்துவரும் தன் இளைய மகனை ஒருநாள் அழைத்தார். கவர்ச்சிமிக்க பந்தயக் குதிரையைப் போன்ற தோற்றமுடைய அவன் அன்றுதான் தன் தந்தையை நேருக்கு நேராகச் சந்திக்கிறான், திருவரங்கத்துரை நிலா முற்றத்தைச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு மூத்தவன் மங்களசாமிக்குப் பிள்ளையில்லாக் குறையைக் கண்கலங்கச் சொன்னார், கடலில் கலம் கவிழ்வதைப்போல் கண்ணீர் தோய்ந்த அவர் கண்களுக்கு அந்த நிலா முற்றம் தெப்பம்போல மிதந்தது. தந்தையைப் பிரிந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அன்றுதான்

அவர் கண்கள் கண்ணீரைச் சொரிந்திருக்கின்றன. அப்பன் சொத்தில் மகனுக்குப் பங்கு இருப்பதைப்போல் அப்பன் கடனிலும் மகனுக்குப் பங்கு உண்டு. சிலபேர் சொத்தை வைத்துவிட்டு மறைகிருர்கள். சில பேர் கடனை வைத்துவிட்டு மறைகிருர்கள். ஆனல் திருவரங்கத்துரை கடனுக்குப் பதிலாக மகனுக்குக் கவலையைக் கொடுத்தார். ஏழைகள் வீடுகளில் வறுமை நிறைந்திருப்பதைப்போல் ஜமீன் மாளிகைகளில் ரகசியங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும். பட்டாடைகளும் பழக்கங்களும் கோட்டைக்கு வெளியேதான் கவர்ச்சியாக இருக்குமே தவிர கோட்டைக்கு உள்ளே அதற்கு மதிப்பும் கிடையாது. மரியாதையும் கிடையாது.

அபிமன்யு கோட்டைக்குள் வாழ்ந்ததைவிட கோட்டைக்கு வெளியேதான் அதிகம் வாழ்ந்திருக்கிருன். ஜமீன் பழக்க வழக்கங்களை விட சாதாரண மக்களின் தொடர்புதான் அவனுக்கு அதிகம். குதிரைச் சவாரியும் யானை ஏற்றமும் விக்கிரமாதித்தன் கதைகளாகப்போய்விட வேண்டுமென்று அவனுக்கு ஆசை!

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு பலவீனம் இருக்கிறது. பெரிய பணக்காரனுக்குக் கஞ்சத்தனம் பலவீனம். அழகிய பெண்ணுக்கு அகங்காரம் பலவீனம். எழுத்தாளனுக்கு சோம்பேறித்தனம் பலவீனம். கவிஞனுக்கு மதுப் பழக்கம் பலவீனம். அதைப்போல் எல்லாச்சிறப்பும் பெற்ற அபிமன்யு பல பெண்களுக்கு மயக்கமருந்தாக இருந்துவிட்டான்! இவன் இருக்குமிடம் தேடிவந்த பெண்களும் உண்டு. இவனே தேடிப்போன பெண்களும் உண்டு! இவன் தந்தை திருவரங்கத்துரை எந்த ஜமீனுக்கும் விருந்தாளியாகப் போனதில்லை. ஆனல் அபிமன்யு விருந்தாளியாகப் போகாத ஜமீன் கிடையாது. குதிரை லாயத்தில் வெண்புரவியைக்காணவில்லை யென்ருல், அபிமன்யு தஞ்சைக்குப் போயிருக்கிருன் என்று பொருள். கோச்சு வண்டி அரண்மனைக்கு வெளியே போனல் அபிமன்யு திருப்புல்லாணிக்குப் போயிருக்கிருன் என்று அர்த்தம். முத்துப்பேட்டை ராவுத்தர்களும் கீழக்கரை மரைக்காயர்களும்தான் அபிமன்யுவுக்கு நண்பர்கள். திருவரங்கத்துரைக்குத் தன்னுடைய இளைய மகன் அபிமன்யு ஒரு இஸ்லாமியப் பெண்ணை மணந்துகொண்டு எங்கே முகம்மதியன் ஆகிவிடுவானே என்ற கவலைகூட இருந்தது. அபிமன்யு அப்படி மதம் மாறிவிட்டால் இந்த ஜமீனைத் தானே அழித்துவிட வேண்டுமென்று கூட நினைத்திருக்கிருர். இதற்கெல்லாம் சேர்த்து முற்றுப்புள்ளி வைப்பதற்காகத்தான் அபிமன்யுவை அழைத்து இதயத்தைத் திறந்து காட்டினர். அபிமன்யுவின் பதில் திருவரங்கத் துரையை திகைக்க வைத்தது. தன்னுடைய ஜமீன் அழிந்து போய்விட்டதாகவே நினைத்தார். ஏழை சேர்த்துவைத்த உண்டியல் களவு போனதைப் போன்ற உணர்ச்சி அவருக்கு. குலப் பெருமை, ஜமீன் கௌரவம் எல்லாவற்றையும் நொடிப்பொழுதில் விழுங்கி விடக்கூடிய பதிலாக அபிமன்யு சொன்ஞன். திருவரங்கத்துரை அபிமன்யுவின் பதிலை நினைத்துப் பார்க்கிருர்:

''எனக்குத் திருமணம் ஆகிவிட்டது; என் மனைவி மூன்று மாதக் கர்ப்பிணி'' —இதுதான் அபிமன்யு அளித்த பதில். அதற்குப் பிறகு திருவரங்கத்துரை பேசவில்லை.

நவம்பரிலிருந்து
மாண்புமிகு அமைச்சர்
மா. முத்துசாமி
அவர்களது
இரஷ்யப் பயணம்
பற்றிய தொடர் கட்டுரை
காஞ்சியில் வெளிவருகிறது.

உரைகல்:

மோகனரங்கம் கவிதைகள்

எழுதியவர்:
ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
வெளியிட்டோர்:
வசந்தா பதிப்பகம், ஆலந்தூர்.
1968, பக்கங்கள் 96
விலை ரூ. 2—00

இசைக் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களுடைய அழகு மலர்க் கவிதைகளின் பழகுதமிழ்ப் பைம்பொழிலே இத்தொகுப்பு நூல், தமிழ், இயற்கை, இன்பம், உலகம், இசைப் பாடல், பல்சுவை ஆகிய அறுவகைச் செடிகொடிகளில் பூத்த ஐம்பத்திரண்டு கவி மலர்களைக் கொண்ட அழகோவியம் இந்நூல்.

'தமிழே, வணக்கம்' என நூலினைத் தொடங்குவதிலிருந்தே கவிஞரிடம் தமிழ்ப் பற்று களிநடம் புரிவதைத் காணலாம். அந்தத் தமிழானது,

கோழைக்கும் வாள்தந்து புகழானது
—மண்ணில்
கொடிகட்டி ஆள்கின்ற மொழியானது

என்னும்போது அவரது தமிழார்வம் தழைத்துச் செழிப்பதைக் காண்கிருேம்.

குலவிப் பாடும் குழந்தை முகம்
குமரி எழிலும் குலுங்கும் தமிழே

எனக் கோலத் தமிழைத் தன் சீலக் கவியால் சித்திரிக்கும் சிறப்பே, சிறப்பு!!

திருமணத்திற்கு முன்பே, 'பருவத்தேன் குடித்துவிட வேட்கை கொள்ளும்' அன்புக் காதலனிடம்,

தாகமுடன் வருவோர்க்குத் தணிக்கும்,
—கேணித்
தண்ணீராய் நினைத்தீரோ பெண்கள்
—வாழ்வை

என வினுத் தொடுக்கும் வேல்விழியைப் படைத்த ஆலந்தூராரை எவ்வளவு பாராட்டினலும் தகும்.

மேதின வாழ்த்துக் கவிதையில்,

உழைப்பவர் திறனும் உவமையின் திறனும் ஒருங்கிணைந்து காணப்படும் ஒப்பற்ற கவிதையின் திறனைக்கண்டு வியக்கின்ருேம்.

வாய்மையின் வெற்றி என்னும் கவிதையில்—

திருடனின் பின்னே சென்ருல்
திருக்குறள் சிரித்திடாதோ

என்ற வரி அவரது கவியெழுதும் முயற்சிக்குக்கிடைத்த முழு வெற்றியாகும்,

"......கவிதைகளுள் பல, ஓசையின் பத்திற்காகவே திரும்பத்திரும்பப் பாடி மகிழுமாறு தூண்டுகின்றன. எல்லாக் கவிதைகளும் உணர்ச்சி வளமும், பொருள் பொலிவும் உடையன'' — இஃது இருபதாம் நூற்ருண்டின் இலக்கியச் சித்தர் டாக்டர் மு. வ. அவர்கள் இந்நூலின் அணிந்துரையின் வாயிலாக இசைக் கவிஞருக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழ் ஆகும்! அதுவே, நம் சான்றிதழும் ஆகும்!!

—மணிவேந்தன்.

சாதாரண நோய்களிலிருந்து நிம்மதியான நிவாரணம் பெற...





முதுகு வலி:
முதுகு, கழுத்து, தோள்பட்டைகளில் அமிர்தாஞ்சனத்தை சூடு பெறத் தேய்க்கவும்.

நரம்புச் சுளுக்கு:
சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் அமிர்தாஞ்சனததை நன்ருக அழுத்தித் தேய்த்து வெந்நீர் ஒத்தடம் கொடுக்கவும்.

அமிர்தாஞ்சனம்

75 வருடங்களுக்கும்
மேலாக புகழ் வாய்ந்தது

AMR-

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
56, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.